# விஜயபாரதம்

மின்னணு தின இதழ் (தனிச்சுற்று) VIJAYABHARATHAM DAILY

பிலவ, ஆனி - 30 புதன் 14.07.2021 மலர் - 2, இதழ் - 99


## ஆகஸ்ட் மாத திருமலை தரிசன டிக்கெட்



விஜயபாரதம்

கொரோனா பரவல் காரணமாக, திருமலை ஏழுமலையானை தரிசிக்க பக்தர்கள் தரிசன டிக்கெட்டுகளை ஆன்லைனில் பெற்று மட்டுமே செல்லமுடியும். ஒவ்வொரு மாதத்திற்கும் தேவையான டிக்கெட்டுகள், அதற்கு முந்தைய மாதத்தின் இறுதி வாரங்களில், தேவஸ்தான இணையதளத்தில் வெளியிடப்படுகிறது. அவ்வகையில், ஆகஸ்ட் மாதத்திற்கான, 300 ரூபாய் விரைவு தரிசன டிக்கெட்டுகள், வரும் 20ம் தேதி இணையதளத்தில் வெளியிடப்பட உள்ளதாக திருமலை திருப்பதி தேவஸ்தானம் அறிவித்துள்ளது.

## வேலூர் இப்ராஹிம் குற்றச்சாட்டு

நீலகிரி மாவட்டம், ஊட்டியில் பத்திரிகையாளர்களை சந்தித்த வேலூர் இப்ராஹிம், 'தி.மு.க., தேச விரோதத்தை ஊக்குவிக்கிறது. 'ஒன்றிய அரசு' என்று தி.மு.கவினர் சொல்லி மக்களை திசை திருப்புகின்றனர். 'ஜெய்ஹிந்த்' என்ற தேசத்தின் தாரக மந்திரத்தை இழிவுப்படுத்தி வருகின்றனர். இதனை, பா.ஜ.க தொடர்ந்து கவனித்து வருகிறது. வெற்றி பெற்றால், பெட்ரோல், டீசல் விலையை லிட்டருக்கு, 5 ரூபாய் குறைப்போம் என, தி.மு.க கூறியது. ஆனால், அப்படி குறைக்காமல், மாநில அரசு வரியை உயர்த்தி விட்டு, மத்திய அரசை எதிர்த்து போராட்டம் நடத்துதுகிறது. இதனை, வன்மையாக கண்டிக்கிறோம். பா.ஜ.கவை பொறுத்தவரை ஒரே மக்கள், ஒரே தேசம், ஒரே சட்டம் என்று, அனைவரும் பாரத தாயின் பிள்ளைகளாக இருக்க வேண்டும் என்றுதான் கருதுகிறது' என கூறினார்

விஜயபாரதம்



# தி.மு.க. ஒன்றியத்தின் அத்துமீறல்



விஜயபாரதம்

கும்பகோணம் அருகே உள்ள பெரும்பாண்டி பஞ்சாயத்து தலைவரான பாஸ்கர் என்பவர், கும்பகோணம் வடக்குப் பகுதியின் தி.மு.க ஒன்றிய செயலராகவும் உள்ளார். அங்கு, பஞ்சாயத்து அலுவலகம் புதுப்பிக்கப்படுவதை பயன்படுத்தி அவர், பஞ்சாயத்து அலுவலகத்தின் முகப்பில் அமைக்கப்பட்ட போர்டிகோ கூரையில், தி.மு.கவின் உதயசூரியன் சின்னத்தை வரைந்துள்ளார். அரசுக்கு சொந்தமான அலுவலகத்தில் இப்படி தி.மு.கவின் சின்னம் வரையப்பட்டது அப்பகுதி மக்களிடையே கடும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது. இதையடுத்து, அப்பகுதி அ.தி.மு.கவினர் கும்பகோணம் ஆர்.டி.ஓ அலுவலகத்தில் இது குறித்து புகார் அளித்தனர்.

# பள்ளிவாசல் ஆசிரியர் மீது குண்டாஸ்

ராமநாதபுரம், முதுகுளத்தூரில் அரசு உதவி பெறும் பள்ளிவாசல் பள்ளியில் அறிவியல் ஆசிரியராக பணியாற்றியவர் ஆசிரியர் ஹபீப் முகமது. இவர், அப்பள்ளி மாணவிகளிடம் ஆபாசமாக பேசி, பாலியல் தொந்தரவில் ஈடுபட்டார். பெற்றோர்கள் அளித்த புகரின் அடிப்படையில் அவர் கைது செய்து சிறையில் அடைக்கப்பட்டார். ஹபீப் முகமதுவிடம், மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் விசாரணை மேற்கொண்டார். பின்னர் அவர் பணி நீக்கம் செய்யப்பட்டார். இந்நிலையில், போக்சோ சட்டத்தில் கைது செய்யப்பட்ட இவர் மீது, மாவட்ட ஆட்சியர் உத்தரவின்படி, குண்டர் சட்டத்தின்படியும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.



விஜயபாரதம்

# விவாதங்களில் அ.தி.மு.க. பங்கேற்காது



விஜயபாரதம்

அ.தி.மு.க வெளியிட்டுள்ள அறிக்கையில், 'மக்களின் அடிப்படைத் தேவைகள், தினசரி பிரச்னைகள் பல இருக்கின்றன. அதைப்பற்றி சிறிதளவும் கவலைப்படாத ஊடகங்கள், அதிமுகவின் புகழுக்கு இழுக்கு ஏற்படுத்தும் வகையிலும் சிறுமைப்படுத்தும் நோக்கிலும் ஊடக அறத்திற்குப் புறம்பாகவும் விவாத நிகழ்ச்சிகளை நடத்துவது வேதனையை அளிக்கிறது. இதனால், ஊடக விவாதங்களில் அதிமுக சார்பில் யாரும் இனி பங்கேற்க மாட்டார்கள்' என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கோவையில் கோயில்கள் இடிப்பு



விஜயபாரதம்

கோவை, முத்தண்ணன் குளத்தில் ஆக்கிரமிப்பு வீடுகள், 2 ஆயிரத்துக்கும் அதிகமாக உள்ளன. ஸ்மார்ட் சிட்டி திட்டத்தின் கீழ் இப்பகுதியில் பல்வேறு திட்டப் பணிகள் செயல்படுத்தப்பட உள்ளன. இதனால், அப்பகுதி மக்களுக்கு குடிசை மாற்று வாரியத்தால் வீடுகள் ஒதுக்கப்பட்டு அவர்கள் அங்கு சென்றுவிட்டனர். அவர்களது ஆக்கிரமிப்பு வீடுகள் இடிக்கப்பட்டன. மேலும், அப்பகுதியில் 40 ஆண்டுகள் பழமையான ஐந்துக்கு மேற்பட்ட கோயில்களையும் மாநகராட்சி நிர்வாகம், காவல்துறை உதவியுடன் இடித்தனர். இதற்கு எதிர்ப்பு தெரிவித்த அப்பகுதி மக்கள், தர்ணாவில் ஈடுபட்டனர். அவர்களை காவலர்கள் கைது செய்தனர். பின்னர், ஜேசிபி எந்திரங்களின் உதவியுடன் கோயில்கள் இடிக்கப்பட்டன. கோயில்கள் இடிக்கப்பட்டபோது, மக்கள் கதறி அழுதனர்.

# செப்டம்பர் 12ல் நீட் தேர்வு




விஜயபாரதம்

மருத்துவ படிப்பிற்கான 'நீட்' நுழைவுத் தேர்வு, வரும் செப்டம்பர் 12ம் தேதி நடைபெறும் என்று மத்திய கல்வி துறை அமைச்சர் தர்மேந்திர பிரதான் தெரிவித்திருக்கிறார். மேலும், தேர்வினை எழுத விரும்பும் மாணவர்கள் நாளை மாலை 5 மணி முதல் அதற்கான விண்ணப்பங்களை பதிவிறக்கி விண்ணப்பிக்கலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. கொரோனா காரணமாக நீட் தேர்வு நடக்கும் நகரங்களின் எண்ணிக்கை இந்த முறை அதிகரிக்கப்பட்டுள்ளது. கொரோனா விதிகளின் அடிப்படையில் தேர்வர்கள் அனைவருக்கும் மாஸ்க் வழங்கப்படும் எனவும் அறிவிப்பில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இந்நிலையில் செய்தியாளர்களைச் சந்தித்த மருத்துவத்துறை அமைச்சர் மா. சுப்ரமணியன், ``நீட் தேர்வு தொடர்பான வழக்கு விசாரணைக்கு வர உள்ள நிலையில் தமிழக அரசின் தெளிவான முடிவு அதன் பின்னர் அறிவிக்கப்படும். நீட் தேர்வுக்காக தமிழக அரசு சார்பில் பயிற்சி தொடர்ந்து அளிக்கப்பட்டு வருகிறது. நீட் தேர்வுக்கு எதிரான தமிழக அரசின் சட்டப் போராட்டம் தொடர்ந்து நடைபெறும். எனினும் நீட் தேர்வுக்கு தமிழக மாணவர்கள் தயாராக இருக்கவேண்டும்” என்றார்.

# துவங்கிவிட்டதா 3ம் அலை



விஜயபாரதம்

தெலுங்கானா மாநிலம் ஐதராபாத் பல்கலைக் கழகத்தின் இயற்பியல் துறை நிபுணரான டாக்டர் விபின் ஸ்ரீவத்சவா, கொரோனா மூன்றாம் அலை தொடர்பாக, கடந்த 15 மாதங்களில் நிகழ்ந்த புதிய தொற்று பரவல், இறப்பு தொடர்பான தினசரி பதிவுகளை பகுப்பாய்வு செய்து வருகிறார். அந்த ஆய்வின்படி, கடந்த 4ம் தேதி கொரோனா மூன்றாம் அலை துவங்கிவிட்டதாக அவர் கூறியுள்ளார். கடந்த பிப்., மாதம் நாட்டில் இரண்டாம் அலை துவங்கியபோது பதிவான புள்ளி விபரங்கள், தற்போதைய நிலையுடன் ஒத்திருக்கிறது. கொரோனா தடுப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் முறையாக பின்பற்றப்படாவிட்டால், மூன்றாம் அலை வேகம் எடுப்பதை தடுக்க முடியாது என்று அவர் எச்சரித்துள்ளார். இவர் ஐதராபாத் பல்கலைக் கழகத்தின் முன்னாள் துணை வேந்தர் என்பது குறிப்பிடத்தக்கது.

# திருமலையில் அறைகள் பெறுவது எளிது



விஜயபாரதம்

திருப்பதி ஏழுமலையானை தரிசிக்க திருமலைக்கு செல்லும் பக்தர்கள், தங்கும் அறைகள் எடுக்க பல சிரமங்களை சந்தித்து வந்தனர். பக்தர்களின் தொடர் வேண்டுகோளுக்கு இணங்க, புதிய நடைமுறையை திருமலை திருப்பதி தேவஸ்தானம் கடந்த மாதம் அறிமுகப்படுத்தியது. அதன்படி, திருமலையில் ஜிஎன்சி டோல்கேட், பாலாஜி பஸ் நிலையம், கவுஸ்தபம் தங்கும் விடுதி, ராம்பக்கீச்சா தங்கும் விடுதிகள், எம்பிசி ஆகிய 6 இடங்களில் அறைகள் பதிவு செய்யும் மையங்கள் அமைக்கப்பட்டன. ஆன்லைன் மூலம் பதிவு செய்துள்ள பக்தர்களுக்கு குறிப்பிட்ட நாளில் அவர்களது அலைபேசியில் குறுந்தகவல் அனுப்பப்படும். அதில் குறிப்பிட்டுள்ள இடத்துக்கு பக்தர்கள் சென்று, அந்த தகவலை காண்பித்து, அறைக்கான சாவியை பெற்றுக் கொள்ளலாம். நேரில் வரும் பக்தர்கள், இந்த 6 மையங்களில் ஏதேனும் ஒன்றில் ஆதார் அட்டையை காண்பித்து அறையை பதிவு செய்து கொள்ளலாம். அரை மணி நேரத்துக்குள் அவர்களுக்கு அறை ஒதுக்கப்பட்டு, அதற்கான தகவல் அவர்களின் செல்போனுக்கு சென்றுவிடும். பின்னர் பணம் செலுத்தி விட்டு, குறிப்பிட்ட இடத்துக்குச் சென்று சாவியை பெற்றுக்கொள்ளலாம். இது பக்தர்களிடையே மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

# காஷ்மீரில் பயங்கரவாதிகள் கைது



விஜயபாரதம்

வளர் இளம் பருவத்தில் உள்ள இளைஞர்களை மயக்கி தீவிர மதக் கருத்துக்களை அவர்கள் மனதில் புகுத்தி ஜிகாத் போரில் ஈடுபடத் தூண்டிய உமர் நிசார், தன்வீர் அஹமத் பட், ரமீஸ் அஹ்மத் லோன் ஆகிய மூன்று பயங்கரவாதிகளை என்.ஐ.ஏ. கைது செய்தது. முன்னதாக, உ.பி., மேற்கு வங்கம், கேரளா மற்றும் நாட்டின் பல பகுதிகளில் ஐ.எஸ்.ஐ.எஸ். ஆதரவாளர்களை அண்மையில் என்.ஐ.ஏ. தொடர்ந்து கைது செய்து வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

# துணை சபாநாகர் கார் மீது தாக்குதல்



விஜயபாரதம்

ஹரியானா டெல்லி எல்லைப் பகுதியில், மத்திய அரசின் வேளாண் சட்டங்களை ரத்து செய்யக்கோரி, விவசாயிகள் பல மாதங்களாக போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். இந்நிலையில், கூட்டம் ஒன்றில் பங்கேற்றுவிட்டு திரும்பிக்கொண்டிருந்த துணை சபாநாயகர் ரன்பிர் கங்வாவின் கார் மீது, விவசாய போராட்டக்காரர்கள் தாக்குதல் நடத்தியுள்ளனர். இதனால், காரின் பின்பக்க கண்ணாடி சேதமடைந்தது. அதிர்ஷ்டவசமாக, துணை சபாநாயகர் காயங்களின்றி தப்பினார் என காவல்துறையினர் தெரிவித்துள்ளனர்.

# வளர்ச்சியடையும் மணிப்பூர்



விஜயபாரதம்

மணிப்பூரில் 16 தேசிய நெடுஞ்சாலைத் திட்டங்களுக்கு மத்திய அமைச்சர் நிதின் கட்கரி, அடிக்கல் நாட்டினார். அப்போது அவர், ‘ரூ. 4,148 கோடி முதலீட்டில் இத்திட்டம் மேற்கொள்ளப்படுகிறது. 298 கி.மீதூரசாலைகள்அனைத்துத்தட்பவெட்ப சூழலுக்கு ஏற்ற வகையில் போடப்படும். இதனால், மணிப்பூர் நாட்டின் பிற பகுதிகளுடனும் அண்டை நாடுகளுடனும் இணைக்கப்படும். இதனால் அப்பகுதி, விவசாயம், சுகாதாரம், தொழில்துறை, பொருளாதாரம் என அனைத்துத் துறைகளிலும் வளர்ச்சியடையும். வேலைவாய்ப்புப் பெருகும். மேலும், ரூ. 5000 கோடி மதிப்புள்ள திட்டங்களுக்கு அனுமதி அளிக்கப்படும். இதற்கான விரிவான திட்ட அறிக்கைகள் ஆறு மாதங்களுக்குள் சமர்ப்பிக்கப்பட்டு, ஒரு வருடத்தில் பணிகள் தொடங்கும்’ என அறிவித்தார்.

# தலாய் லாமா பிறந்தநாள் சீனா எதிர்ப்பு



விஜயபாரதம்

திபெத்தியத் தலைவர் தலாய் லாமாவின் 86வது பிறந்த நாள், கடந்த 6ம் தேதி கொண்டாடப்பட்டது. பிரதமர் நரேந்திர மோடி தொலைபேசி வாயிலாக தலாய் லாமாவுக்கு பிறந்தநாள் வாழ்த்துத் தெரிவித்தார். இந்நிலையில், லடாக் யூனியன் பிரதேசத்தில் உள்ள டெம்சுக் கிராமத்தினர், தலாய் லாமாவின் பிறந்த நாளை கொண்டாடினர். அப்போது, சீன எல்லைப் பகுதியில் இருந்து அந்நாட்டு ராணுவத்தினரும், பொது மக்களும், லடாக் பகுதியில் உள்ள சிந்து நதியின் மறுபுறம், கையில் பதாகைகள், சீன கொடிகளுடன் நின்று, தலாய் லாமாவின் பிறந்தநாள் கொண்டாட்டத்துக்கு எதிர்ப்பு தெரிவித்தனர்.

# பாகிஸ்தானில் கட்டாய மதமாற்றம்





விஜயபாரதம்

பாகிஸ்தானில் சிறுபான்மை யினராக உள்ள ஹிந்துக்கள், பாகிஸ்தானின் மக்கள்தொகையில் ஏறக்குறைய 2 சதவிகிதம் உள்ளனர். பெரும்பாலான ஹிந்துக்கள் சிந்து மாகானத்தில் வாழ்கின்றனர். பாகிஸ்தானில் வசிக்கும் ஹிந்துக்கள், சீக்கியர், கிறிஸ்தவர் என்ற அனைத்து சிறுபான்மையினரும் பல்வேறு வழிகளில் கட்டாய மதமாற்றத்திற்கு உள்ளாகின்றனர். அவ்வகையில், அப்பகுதி நகராட்சித் தலைவர் அப்துல் ரவூப் நிஜாமணி, அங்கு மற்றொரு வெகுஜன மதமாற்றத்தில் ஈடுபட்டுள்ளார். அவர் தனது முகநூல் பதிவில், 'இன்று, 60 பேர் இஸ்லாத்தை எனது கண்காணிப்பில் ஏற்றுக்கொண்டனர், அவர்களுக்காக ஜெபிக்கவும்' என்று அவர் பதிவிட்டுள்ளார். இது குறித்த வீடியோஒன்றையும் அவர் பகிர்ந்துள்ளார்.

# மூன்றாவது டோஸ் வேண்டாம்




விஜயபாரதம்

கொரோனா தொற்றுக்கு 3வது டோஸ் தடுப்பூசி செலுத்துவதற்கு மருந்து தயாரிப்பு நிறுவனங்கள் தொடர்ந்து வலியுறுத்துகின்றன. இதனால் பல்வேறு நாட்டு அரசுகளும் வேறு வழியின்றி அதற்கு நட்வடிக்கை எடுக்கத் துவங்கியுள்ளன. இந்நிலையில், 3வது டோஸ் போட அனுமதி அளிப்பதற்கு போதிய அறிவியல்பூர்வ ஆதாரமும், தரவுகளும் இல்லை. அதற்குப் பதிலாக, பணக்கார நாடுகள் தங்களிடம் மீதமுள்ள தடுப்பூசிகளை ஏழை நாடுகளுக்குப் பகிர்ந்தளிக்க முன்வர வேண்டும். உலகளவில் உயிரிழப்பு மீண்டும் அதிகரிக்கத் தொடங்கியுள்ளது. எனவே, தடுப்பூசி தயாரிப்பு நிறுவனங்கள் ஐ.நாவின் கோவாக்ஸ் திட்டத்துக்கு தடுப்பூசிகளை வழங்க வேண்டும்' என உலக சுகாதார அமைப்பின் இயக்குநர் டெட்ரோஸ் அதானோம் கூறியுள்ளார்.

# கம்யூனிஸ அரசை எதிர்த்து போராட்டம்


விஜயபாரதம்

கியூபாவில் கொரோனா தடுப்பூசி செலுத்தும் பணிகளை தீவிரப்படுத்த வலியுறுத்தியும், நாட்டில் நிலவும் பொருளாதார மந்த நிலை, உணவு பஞ்சம், பிற தேவைகளின் பயங்கர பற்றாக்குறை உள்ளிட்டவற்றை சரிசெய்ய உறுதியான நடவடிக்கைகளை எடுக்க வலியுறுத்தியும், கம்யூனிச சர்வாதிகாரம் வேண்டாம், மக்களாட்சி வேண்டும் என்றும் அரசுக்கு எதிராக மாபெரும் மக்கள் போராட்டம் வெடித்துள்ளது. ஆனால், அமெரிக்காவின் தூண்டுதலின் பெயரில் இந்த போராட்டம் நடந்து வருவதாக கியூபா அரசு குற்றம் சாட்டியுள்ளது. மேலும், போராட்டக்காரர்களை அடக்க, அடக்குமுறையை கையாண்டு வருகிறது. இதுதொடர்பாக அமெரிக்க தேசிய பாதுகாப்பு ஆலோசகர் ஜேக் சல்லிவன் தனது டுவிட்டரில், "கியூபாவில் கருத்துச் சுதந்திரம் இருக்க வேண்டும் என்பதை அமெரிக்கா ஆதரிக்கிறது, மக்கள் மீதான எந்தவொரு வன்முறையையும், அமைதியான போராட்டக்காரர்களை குறிவைத்து நடத்தப்படும் நடவடிக்கைகளை அமெரிக்கா கடுமையாக கண்டிக்கிறது" என்று பதிவிட்டுள்ளார்.

# ஆயுதமேந்தும் இந்தியர்கள்


விஜயபாரதம்

தென் ஆப்பிரிக்காவில் கடந்த 9 ஆண்டுகள் தொடர்ந்து அதிபராக இருந்தவர் ஜேக்கப் ஜூமா. இவர் தனது பதவி காலத்தில் ஊழல், சொத்துக் குவிப்பில் ஈடுபட்டதாக குற்றம் சாட்டப்பட்டார். இதனால், ஜூமா அதிபர் பதவியை ராஜினாமா செய்தார். அவர் மீதான பல்வேறு வழக்குகள் பதிவு செய்யப்பட்டன. ஒரு வழக்கில் அவருக்கு 15 மாத சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது. இதையடுத்து அவரது ஆதரவாளர்கள் வன்முறையில் ஈடுபட்டு வருகின்றனர். போராட்டம் என்ற பெயரில் கடைகள் சூறையாடப்படுகின்றன, தீ வைப்பு சம்பவங்களும் நடக்கின்றன. வன்முறைகளால் 10க்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர். இந்நிலையில், ஜேக்கப் ஜூமா நம் நாட்டை இந்தியர்களுக்கு விற்றுவிட்டார் என டுவிட்டரில் அங்கு ஊழலில் ஈடுபட்ட குப்தா சகோதரர்களின் படம் பகிரப்பட்டது. இதனையடுத்து அங்கு அனைத்து இந்திய வம்சாவளியினர் பாதுகாப்பும் கேள்விக்குறியாகியுள்ளது. அவர்களின் கடைகள், வீடுகள் குறிவைக்கப்படுகின்றன. இதனால், அங்குள்ள இந்திய வம்சாவளியினர், தங்களை பாதுகாத்துக்கொள்ள. வேறு வழியின்றி ஆயுதங்கள் ஏந்தியுள்ளனர். விரைவில் அங்கு ராணுவம் பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்படவுள்ளது. இதனால், பதற்றம் விரைவில் குறையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# ஷிவ் நாடார்



விஜயபாரதம்

ஷிவ் நாடார் தலைமையில் 1976ம் ஆண்டு 6 நண்பர்கள் உடன் இணைந்து டெல்லியில் துவங்கப்பட்ட ஒரு குட்டி நிறுவனம் ஹிந்துஸ்தான் கம்பியூட்டர் லிமிடெட். இன்று இந்நிறுவனம் எச்.சி.எல் சாம்ராஜ்யமாகப் பல பிரிவுகளில் மாபெரும் வளர்ச்சியை அடைந்துள்ளது. சுமார் 20 பில்லியன் டாலருக்கு உலகம் முழுவதும் வர்த்தகம் செய்து வருகிறது. ஆண்டுதோறும் Forbes இதழ் வெளியிடும் உலக பணக்காரர்கள் வரிசையில் தவறாமல் இடம் பெறும் ஒரு தமிழ் பெயர் ஷிவ் நாடார்.

திருச்செந்தூர் அருகில் உள்ள மூலை பொழில் கிராமத்தில் பிறந்த ஷிவ் நாடார், படித்து முடித்த பின்பு, புனேவில் பணியாற்றினார். வேலையில் இருக்கும்போதே வியாபாரம் செய்யத் திட்டமிட்டார். பாரதத்தின் புதிய தொழிற்கொள்கையால், ஐ.பி.எம் பாரதத்தை விட்டு வெளியேறியது. இதை வாய்ப்பாகப் பயன்படுத்திக்கொண்டார். 'மைக்ரோகார்ப்' என்ற நிறுவனத்தை, நண்பர்களுடன் இணைந்து ரூ. 1.87 லட்சம் முதலீட்டில் துவக்கினார்.


பன்னாட்டு நிறுவனங்களுக்கு இணையானத் தரத்தில் கம்பியூட்டர்களைத் தயாரித்தார். குறிப்பாக 1988ல் பல புதிய சிப்கள் இணைத்து ஹெச்சில் UNIX இயங்குதளம் கொண்ட கம்பியூட்டர்களைத் தயாரித்தார். இதை ஹெச்.பி, மற்றும் சன் மைக்ரோசிஸ்டம்ஸ் உள்ளிட்ட நிறுவனங்கள் அடுத்த 3 ஆண்டுகள் கழித்துத்தான் தயாரித்தன. அந்த அளவிற்கு ஹெச்சிஎல் தொழில்நுட்பத்தில் முன்னோடியாக இருந்தது.

பாரதத்தில் தயாரித்து அதை வெளிநாடுகளில் வர்த்தகம் செய்யவும், அதற்கான தேவையை உருவாக்கவும் தெரிந்தவர் ஷிவ் நாடார். இவர் தான் ஒரிஜினல் 'மேக் இன் இந்தியா' தொழிலதிபர் என்றும் வினித் நாயர் கூறியுள்ளார். கம்பியூட்டர் மட்டுமே தயாரித்து விற்பனை செய்து வந்த ஹெச்சிஎல், 2000ல் ஐ.டி சேவை துறையில் நுழைந்தது. அதிலும் சாதனை படைத்தது.

தொழில்துறையில் மட்டும் இல்லாமல், பல்வேறு சேவைப் பணிகளையும் செய்துவருகிறார். 2008ல் ஷிவ் நாடார் அறக்கட்டளையை நிறுவி, பொருளாதாரத்தில் பின்தங்கிய ஏழை, எளிய மாணவ, மாணவிகளுக்கு கல்விக் கற்க உதவிகள் செய்து வருகிறார். தன் வாழ்க்கையில் சரியான பாதையை தேர்ந்தெடுத்து, கடின உழைப்பால் குறுகிய காலத்திற்குள் மிகப்பெரிய இலக்கினை அடைந்தவர் இவர் என்று சொன்னால் அது மிகையல்ல.

கோகுல் சீனு

# ம என்ற மகேந்திரநாத் குப்தா


விஜயபாரதம்

ராமகிருஷ்ண பரமஹம்சரின் இல்லறச்சீடரான மகேந்திரநாத் குப்தர் 'ஸ்ரீராமகிருஷ்ணரின் அமுதமொழிகள்' நூலின் ஆசிரியர். இவர் 1854 ஜூலை 14ம் தேதி, கல்கத்தாவில் பிறந்தார். ராமகிருஷ்ணருடன் இவரது அனுபவம் குறித்து தேதி, நேரம் உட்பட அனைத்தையும் எழுதி தொகுத்தார்.. அந்த நாட்குறிப்புகளின் தொகுப்பே ஸ்ரீராமகிருஷ்ணரின் அமுதமொழிகள்' என்னும் நூல்.

இவர் பிரம்ம சமாஜத் தலைவர் கேசவ சந்திர சேனின் உறவுப் பெண்ணான நிகுஞ்ச தேவியை திருமணம் செய்தவர். 1882 பிப்ரவரியில் ராமகிருஷ்ண பரமஹம்சரை சந்தித்தார். அப்போது இவர், ஈசுவர சந்திர வித்தியாசாகரின் சியாம் பஜார் கிளைப் பள்ளியில் தலைமை ஆசிரியராக இருந்தார்.

'ம' என்பது இவரது பெயரின் சுருக்கமாகவும் புனைப்பெயராகவும் அமைந்தது. அமுதமொழிகளில் இவர் மாஸ்டர் என்று அழைக்கப்பட்டது குறிப்பிடப்பட்டுள்ளது.

மகேந்திரநாத் குப்தா ஸ்ரீராமகிருஷ்ணரை சந்தித்தபோது, ஸ்ரீராமகிருஷ்ணர் அவரிடம் ''உனது கடவுள் நம்பிக்கை... உருவ வழிபாட்டிலா அல்லது அருவ வழிபாட்டிலா" என்று கேட்டார்.

''சுவாமி, அருவத்தில்தான் எனக்கு நம்பிக்கை" என்றார் ம. ஸ்ரீராமகிருஷ்ணரும், ''சரி, ஏதாவது ஒன்றில் நம்பிக்கை வைப்பது நல்லது. ஆனால் இறைவனுக்கு உருவமும் உண்டு, அருவமும் உண்டு" என்றார். அப்போது மகேந்திரநாத், ''சுவாமி இறைவன் உருவம் உடையவர் என்பதை ஒப்புக்கொண்டாலும் அவர் களிமண் பொம்மையாக இருக்கக் கூடுமா" என்று கேட்டார்.

ஸ்ரீராமகிருஷ்ணர் புன்சிரிப்புடன், ''களிமண் பொம்மையை வழிபடுவது தவறாக இருந்தால் ஆண்டவனாகிய அவனுக்கு அது தெரியாதா? தன்னைத்தான் அந்த மண் வடிவில் வழிபடுகிறார்கள் என்பதை அவன் அறிய மாட்டானா? அவனை நாம் வழிபடுகிறோம் என்ற ஒன்றே அவனுக்கு மகிழ்ச்சியைத் தரும். ஞானமும் பக்தியும் உண்டாவதற்கான வழியை அதில் இருந்தே பெற நாம் முயற்சி செய்யலாம். ஒரு தாய் தன் குழந்தைகளின் ஜீரணசக்திக்கு ஏற்ப உணவு சமைக்கிறாள். அதுபோல யாரால் எவ்வளவு ஜீரணிக்க முடியுமோ அந்த அளவுக்கு பூஜை முறைகளை நமது முன்னோர்கள் ஏற்படுத்தியுள்ளனர்" என்று விளக்கினார்.

அவ்வளவுதான், மகேந்திரநாத் குப்தாவின் மனம் மாறியது. பிறகு ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்சரின் இல்லறச் சீடரானார்.

**மகேந்திரநாத் குப்தரின் பிறந்த நாள் இன்று**

ஜெ.எஸ். ஸ்ரீதரன்

# வலையில் சிக்கிய மீம்கள்












கருணாநிதியின் வாழ்க்கை வரலாறு, பாடப்புத்தகங்களில் கொண்டு வர நடவடிக்கை - லியோனி

அப்போ பாடபுத்தகத்துல இது எல்லாம் வருமா சார் !!?

## அடித்தட்டு மக்களை அமைச்சராக்கினால் பாஜக

JUST IN

Polimer NEWS



மத்திய அமைச்சராக தமிழக பா.ஜ.க. தலைவர் எல்.முருகன் பதவியேற்பு

## பெண்களை இழிவாக பேசியவரை பாடநூல் கழக தலைவராக நியமிதால் திமுக



தமிழ்நாடு பாடநூல் நிறுவனம் - கல்வியியல் கழகத்தின் தலைவராக திண்டுக்கல் ஐ.லியோனி நியமனம்